# தங்க நகைக் கடனுக்கான கட்டுப்பாடுகளை மறுபரிசீலனை செய்க!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமனுக்கு கடிதம்!

**சென்னை, மே.29-**

**தங்க நகைக்கடன் வழங்குவதற்கான நெறிமுறைகளில் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து முன்மொழியப்பட்டுள்ள இந்திய ரிசர்வ் வங்கியின் வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை மறுபரிசீலனை செய்யக்கோரி ஒன்றிய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

தங்க நகைக்கடன் வழங்குவதற்கான நெறிமுறைகளில் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து முன்மொழியப்பட்டுள்ள இந்திய ரிசர்வ் வங்கியின் வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை மறுபரிசீலனை செய்யக்கோரி ஒன்றிய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.5.2025) கடிதம் எழுதியுள்ளார்.

**கிராமப்புற கடன் விநியோக முறைக்கு கடும் இடையூறுகள்!**

அக்கடிதத்தில், விவசாயிகளின் 2 இலட்சம் ரூபாய் வரையிலான பயிக் கடன்களுக்கு தங்க நகைகளை ஈடாக ஏற்றுக்கொள்வதைத் தடுக்கும் வகையில் இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள வரைவு வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து தமிழ்நாடு அரசின் கடுமையான கவலை குறித்து தெரிவிக்கவே தாம் இக்கடிதத்தை எழுதுவதாக குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,

தங்கத்தை பிணையாகப் பெற்று வழங்கப் பெறும் கடன்கள் சரியான நேரத்தில், குறுகிய கால பயிர்க்கடன்களுக்கான முதன்மை ஆதாரமாக விளங்குவதாகவும், குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள், குத்தகை தாரர்கள் மற்றும் பால் பண்ணை, கோழிப்பண்ணை மற்றும் மீன்வளம் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இந்த வரைவு நெறிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டால் பாதிப்படையக்கூடும் என்றும், அதனால் தமிழ்நாட்டிலும் தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் கிராமப்புற கடன் விநியோக முறைக்கு கடுமையான இடையூறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**நகைக் கடனுக்கான கடும் கட்டுப்பாடுகள் பாதிப்பைத் தரும்!**

பெரும்பாலும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு முறையான நில உரிமைகள் அல்லது சரிபார்க்கக்கூடிய வருமான ஆவணங்கள் இல்லை. அத்தகைய விவசாயிகள் தங்கள் வீட்டுத் தங்கத்தை அடகு வைத்து வங்கிக் கடன்களைப் பெறுவதற்கான ஒரு சாத்தியமான மற்றும் கண்ணியமான வழியாக நகைக்கடன் உள்ளது என்றும் தற்போது முன்மொழியப் பட்டுள்ள நெறிமுறைகளால் எளிதாகக் கடன் பெறும்



வழியை நேரடியாகக் குறைத்து, கடன் வாங்குபவர்கள் பெரும்பாலானோரை முறையான கடன் வழங்கும் நிதி நிறுவனங்களை நாடுவதை குறைத்துவிடும் என்று தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நகைக்கடன் பெறும் எளிமையான வழிமுறைகள் கட்டுப்படுத்தப்படுவதால், கிராமப்புற கடன் வாங்குபவர்கள் அதிக வட்டி விகிதங்களை வசூலிக்கும் முறைசாரா மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத கடன் வழங்கும் நிறுவனங்களை நோக்கிச் செல்லவேண்டிய கட்டாயம் ஏற்படலாம். இது அவர்களை சுரண்டல் நடைமுறைகளுக்கு ஆளாக்குவதுடன் கடனை அதிகரிக்கும் மற்றும் முறையான நிதி சேர்க்கையில் ஏற்பட்ட முன்னேற்றத்தை தடுக்கும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

**கடன் பெறும் விவசாயிகளை கடுமையாக பாதிக்கும் நிலை!**

மேலும், கடன் வழங்குபவர்கள் மற்றும் கடன் வாங்குபவர்கள் எதிர்கொள்ளும் சவால்களாக, சிறிய அளவிலான விவசாயக் கடன்களுக்கு கடன் பெறும் திறனை ஆவணமாக மதிப்பீடு செய்யும் முறையானது கிராமப்புறச் சூழலில் செயல்படுத்த முடியாததாக இருக்க வாய்ப்புள்ளது என்றும் இது கடன் வழங்கும் நடைமுறையில் தடைகளை உருவாக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வரைவு நெறிமுறைகள் கடன்களை தவறான வகைப்படுத்தலுக்கு வழிசெய்வதுடன், தணிக்கை தடைகளுக்கும் காரணமாக அமைந்து அதன் காரணமாக வங்கி மற்றும் கடனாளி இருதரப்பினருக்கும் பொறுப்பு அதிகரிக்கக் கூடும் என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, இந்திய ரிசர்வ் வங்கி (தங்க பிணையத்திற்கு எதிராகக் கடன் வழங்குதல்) வழிகாட்டுதல்கள் 2025இல் முன்மொழியப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மறுபரிசீலனை செய்திட இந்திய ரிசர்வ் வங்கிக்கு அறிவுறுத்துமாறு ஒன்றிய நிதியமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வதாகவும், நடைமுறையில் உள்ள கிராமப்புற கடன் வழங்குதலை அங்கீகரிக்கும் விதமாக, ரூ.2 லட்சம் வரையிலான விவசாய மற்றும் விவசாயம் தொடர்புடைய கடன்களுக்கு தங்கத்தை பிணையமாக தொடர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்றும், கடன் கோருபவர்களின் நிதி அணுகலைப் பாதுகாக்கும் அதே வேளையில் கடன் பெறும் அளவினை மதிப்பிட ஒரு சமநிலையான ஒழுங்குமுறை மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்று தான் கருதுவதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, விவசாய சமூகத்திற்கும் கிராமப்புற பொருளாதாரத்திற்கும் அத்தியாவசியமான இந்த விவகாரத்தில் ஒன்றிய நிதியமைச்சர் கவனம் செலுத்தி தீர்வுகாண வேண்டுமென்று தனது கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார். இதே கருத்தை வலியுறுத்தி இந்திய ரிசர்வ் வங்கியின் கவர்னர் அவர்களுக்கும் முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

---

**எஸ்.சேகர் எம்.சி. தலைமை! முத்தமிழறிஞர் கலைஞர் 101வது பிறந்தநாள் விழா!**

# பெருங்களத்தூர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் 1000 பேருக்கு அறுசுவை உணவு!

### டி.ஆர்.பாலு எம்.பி. – அமைச்சர் தா.மோ.அன்பரசன் – எஸ்.ஆர்.ராஜா – இ.கருணாநிதி – பருதி இளம்சுருதி சிறப்புரை!

*தாம்பரம், மே. 29-*

தாம்பரம் மாநகரம், காஞ்சி வடக்கு மாவட்டம், பெருங்களத்தூர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 101 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 1000 பேருக்கு அறுசுவை பிரியாணி வழங்கும் விழா 3.6.2025 செவ்வாய்க்கிழமை காலை 11 மணி அளவில் காமராஜ் நெடுஞ்சாலையில் உள்ள கழகப் பணிமனையில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு தாம்பரம் தெற்குப் பகுதி செயலாளரும் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான பெருங்களத்தூர் எஸ்.சேகர் தலைமை வகிக்கிறார்.

பி.புகழேந்தி எம்.சி., வ.க.ரவிச்சந்திரன், கே.சாமுண்டீஸ்வரி, எஸ். கமலா சேகர் எம்.சி., எஸ்.மதுமிதா மதன் எம்.சி., எஸ். ராஜேஸ்வரி சங்கர் எம்.சி., டி.ஜெபதுரை, ஜெ.குப்புசாமி, எஸ்.சிவக்குமார், வி.யோபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவிற்கு எஸ்.ஐசக், க.குருநாதன், கே.வெங்கடேசன், பி.சுரேஷ், ஆர்.சஞ்சீவி, ஆர்.மஞ்சுநாதன், எஸ்.மலைராஜன், டி.கே.கோட்டி, வி. நடராஜன், எஸ்.சோமசுந்தரம், ஆர். பரஞ்சோதி, டிப்பர் ரவி (எ) டி.கே.எட்டியப்பன், எம்.துளசிராமன், ஆர்.நேரு, ஆர். ரோமன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இம்மாபெரும் விழாவில் கழகப் பொருளாளர் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி., காஞ்சி வடக்கு மாவட்டக் கழக செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன், தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ். ஆர்.ராஜா எம்.எல்.ஏ., இ.கருணாநிதி எம்.எல்.ஏ., தொகுதி பொறுப்பாளர் பரிதி இளம் சுருதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகின்றனர்.

மேலும் இவ்விழாவில் தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் ஜி.காமராஜ், எஸ்.இந்திரன் எம்.சி., டி.காமராஜ் எம்.சி., ஆதிமாறன், லயன் ஆர்.எஸ்.சங்கர், இரா.ரத்தின குமார், பொன்.சதாசிவம், எஸ்.ஜி.கருணாகரன், எம். ராமமூர்த்தி, விக்கி (எ) விக்னேஸ்வரன், ச.ராஜேஷ், மங்களபுரம் எம்.பாபு,

இளைஞரணி அமைப்பாளர் ஆர்.ஓம்பிரகாஷ், துணை அமைப்பாளர்கள் பா.கார்த்திக் ராஜா, எ.குமரன், த.மணிகண்டன், ஆர்.கதிரவன், டி.சுரேஷ், கே.எஸ்.யுவராஜ், ஆர்.அருண்குமார், இரா.தேவராஜ், டி.ராஜேஷ், இ.ரமேஷ் மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், தளபதி ஆட்டோ சங்க ஓட்டுநர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நிறைவாக பகுதிப் பொருளாளர் ஜெ.மணிவண்ணன், மாநகரப் பிரதிநிதி கே.சுந்தர் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ, ஆகியோர் ஆலோசனைப்படி திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் பகுதியை சேர்ந்த மாற்றுத்திறனாளி சீனிவாசன் என்பவர் நான்கு சக்கரம் ஸ்கூட்டர் வேண்டும் என்று கோரிக்கை வைத்த நிலையில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் டாக்டர் வி.சி.ஆர்.குமரன் தமது சொந்த நிதி 1 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நான்கு சக்கர பொருத்தப்பட்டுள்ள ஸ்கூட்டர் வழங்கினார். உடனடியாக கோரிக்கையை நிறைவேற்றி தந்ததற்காக மாற்றுத்திறனாளி மற்றும் அவரது குடும்பத்தினர்கள் தமிழ்நாடு முதல்வருக்கும் தமிழ்நாடு துணை முதல்வருக்கும் கண்ணீர் மல்க நன்றிகளையும் தெரிவித்தார்கள்.

---

**மண்டலப் பொறுப்பாளர் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் பங்கேற்பு!**

# விழுப்புரம் மத்திய மாவட்ட கழக கலந்தாய்வுக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., அறிக்கை!

*விழுப்புரம், மே. 29 -*

விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. மண்டல பொறுப்பாளர் கலந்தாய்வுக் கூட்டம் நாளை (30.05.2025 - வெள்ளிக்கிழமை) பிற்பகல் 2.00 மணிக்கு, வானூர் சட்ட மன்ற தொகுதிக்கும், 3.00 மணிக்கு விழுப்புரம் சட்ட மன்ற தொகுதிக்கும் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள தளபதி அரங்கில் நடைபெற்ற உள்ளது.



எனது தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் மண்டலப் பொறுப்பாளர், அமைச்சர் எம்.ஆர்.பன்னீர் செல்வம் கலந்து கொண்டு நிர்வாகிகளுடன் கலந்துரையாடுகிறார். விழுப்புரம் சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர் துரை கி.சரவணன், மாநில ப பொறியாளர் அணி பசயலாளர், வானூர் சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர் எஸ்.கே.பி.கருணாநிதி ஆகியோர் முன்னிலை வகித்து கலந்து கொள்கிறார்கள். இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன், எம்.எல்.ஏ., தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

### ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி மண்டலம் 6–க்கு உட்பட்ட அரியலூர், பெரம்பலூர், திருச்சி மத்திய, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திண்டுக்கல் மேற்கு மற்றும் திண்டுக்கல் கிழக்கு ஆகிய கழக மாவட்டங்களுக்கான ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டத்தை, மாவட்ட–மாநகரச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், அந்தந்த மாவட்டங்களில் ஏற்பாடு செய்திட வேண்டுமென மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர், மாவட்ட–மாநகர அமைப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 27-05-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

---


நான்காம் ஆண்டு
நினைவு அஞ்சலி
நாள் : 29.05.2025 வியாழக்கிழமை



நினைவில் வாழும் மிசா.பொன்.ராமகிருஷ்ணன் அவர்கள்..

மேனாள் தென்னாற்காடு மாவட்ட தி.மு.க கழக பொறுப்பாளர்
மேனாள் பேரூர் கழக செயலாளர், மேனாள் பெருந்தலைவர்,
தியாகதுருகம் பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம்
தியாகதுருகம்.

...என்றும் தங்களின் நீங்கா நினைவை போற்றும்...

திரு.பொன்.ரா.மணிமாறன் M.Sc.,(Agri)
மாநில பொதுக்குழு உறுப்பினர், கள்ளக்குறிச்சி தெற்குமாவட்டம்
மற்றும்
குடும்பத்தினர் மற்றும் கழக உடன் பிறப்புகள் தியாகதுருகம் பேரூர் பொதுமக்கள்,
மவுண்ட் பார்க் கல்வி குழுமத்தினர்.